FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.நா.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069055

1. District : The Nilgiris PS: V & AC Year: 2026 FIR No.: 1 Date: 20.01.2026
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: amended by PC Sections பிரிவுகள்: 7(a)
   (iii) Act சட்டம்: (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 9.1.2026 Date to : Prior to 20.01.2026.
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : 12.15hrs Time to :
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 20.01.2026 Time : 08.30 hrs.
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) – Time : 08.30 hrs.
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Kotagiri Municipality North East - 26 km.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : (b) Address :
   முறைக் காவல் எண் முகவரி .

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : C. Ramesh (b) Father's/ ~~Husband's~~ Name : K. Chandran
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / ~~கணவர்~~ பெயர்
   (c) Date / Year of Birth : 36 (d) Nationality : Indian (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Business (g) Address : D. No. 12/197, Mount Don Bosco, Kotagiri, The Nilgiris.
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   M. Ilamparithi, Commissioner, Coonoor Municipality i/c Commissioner, Kotagiri Municipality

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction:

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20-01-26 20-01-2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 20.01.2026, 10.10 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. Shanmugavadivu.
Rank: நிலை .....No. எண் .....
Inspr. of Police
V & AC, Nilgiris.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2026/AC/NI, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின்தொடர்ச்சி:-

இன்று 20.01.2026-ம் தேதி செவ்வாய்கிழமை காலை 08.30 மணிக்கு காவல் ஆய்வாளர், G.சண்முகவடிவு ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, மௌண்ட் டான் போஸ்கோ, கதவு எண்.12/1997-ல் வசிக்கும் திரு.K.சந்திரன் என்பவரின் மகன் திரு.C.ரமேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரை பெற்று படித்து பார்த்தேன். புகார் சம்மந்தமாக புகார்தாரரிடம் விசாரித்ததில், குன்னூர் நகராட்சி ஆணையாளர் பொறுப்பு கோத்தகிரி நகராட்சி ஆணையாளர் திரு.M.இளம்பரிதி என்பவர் கட்டிட உரிமம் வழங்க ரூ.5,00,000/- லஞ்சமாக தனக்கு கொடுக்குமாறும், அதில் முதலில் ரூ.2,00,000/-ஐ கொடுக்குமாறும், அதன்பின்னர் மீதித்தொகை ரூ.3,00,000/-ஐ கொடுத்துவிட்டு கட்டிட உரிமத்தை பெற்று செல்லுமாறு கூறியது தெரியவந்தது. பின்னர் எதிரியின் நற்பெயர் குறித்து ரகசிய விசாரணை மேற்கொண்டதில், எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்று தெரியவந்தது. மேலும் புகார்தாரருக்கும், எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. மேலும் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 20.01.2026-ம் தேதி காலை 09.00 மணிக்கு நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2026/AC/NI-ல் பிரிவு 7 (a) ஊழல் தடுப்பு சட்டம், 1988 ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம், 2018-ன் படி மேற்படி எதிரி

திரு.M.இளம்பரிதி, நகராட்சி ஆணையாளர் குன்னூர், பொறுப்பு நகராட்சி ஆணையாளர் கோத்தகிரி என்பவர் மீது வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் C.ரமேஷ், த/பெ K.சந்திரன், கதவு எண்.12/197, மௌண்ட் டான் போஸ்கோ, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி. ஐயா, நான் கோத்தகிரி, மௌண்ட் டான் போஸ்கோ பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் MBA படித்துள்ளேன். நான் கோத்தகிரி, ராம்சந்த் சாலையில், கதவு எண்.17/135 என்ற முகவரியில் மாடர்ன் ஆட்டோ ஸ்டோர்ஸ் என்ற பெயரில் வாகனங்களின் உதிரி பாகங்களை விற்கும் தொழில் செய்து வருகிறேன். ஆரம்பத்தில் எனது அப்பா திரு.K.சந்திரன் அவர்கள் மேற்படி கடையை நடத்தி வந்தார். எனது அப்பாவிற்கு வயதாகிவிட்டதால் தற்போது நான்தான் கடையை நடத்தி வருகிறேன். மேற்படி கடை நெ.3 கோத்தகிரி கிராம புல எண்.975/2B2, 975/7B மற்றும் 975/9B-ல் அமைந்துள்ளது. கடையின் கட்டிடம் பழுதடைந்துவிட்டதால், மழைகாலங்களில் மழைநீரால் வாகன உதிரி பாகங்கள் சேதமாகிறது. அதனால் நான் கடையை இடித்துவிட்டு, புதிதாக கட்டுவதற்கு பதிவுபெற்ற பொறியாளர் திரு.J.ஸ்ரீதர் என்பவர் மூலம் 19.03.2024 அன்று எனது அப்பா திரு.K.சந்திரன் பெயரில் நீலகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு துறையில் கட்டிட வரைபட அனுமதி கோரி ஆன்லைனில் விண்ணப்பித்தேன். அதனுடைய விண்ணப்ப எண்.SWP/BPA/165918/2024. பின்னர் அதற்கான கட்டணம் ரூ.3,62,032/- ஆன்லைனில் செலுத்தினேன். 25.09.2025 அன்று என்னுடைய செல்போன் எண்.9585633888-க்கு மாவட்ட நகர் ஊரமைப்பு துறையிலிருந்து Dear K.CHANDRAN, Building plan online application ref No.SWP/BPA/165918/2024. Proposed Building plan Planning Permission is issued with No- dated on 25/09/2025 and the file has been forwarded to the concern localbody - DTCP என மெசேஜ் வந்தது. நீலகிரி மாவட்ட நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள் 25.09.2025 தேதி வழங்கிய தொழில்நுட்ப ஒப்புதல் செயல்முறை நடவடிக்கைகளை நான் ஆன்லைனில் பதிவிறக்கம் செய்தேன். அதில் எனது Online Application No.SWP/BPA/165918/2024-ன்படி நெ.3 கோத்தகிரி கிராம புல எண்.

975/2B2, 975/7B மற்றும் 975/9B -ல் தரை தளம் 116.07 சதுர மீட்டர் மற்றும் முதல் தளம் 116.07 சதுர மீட்டர் பரப்பளவில் வணிக கட்டிடம் கட்ட நீலகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள் தொழில்நுட்ப ஒப்புதல் அளித்திருந்தார். மேலும் கோத்தகிரி நகராட்சி ஆணையாளர் உரிய கட்டணம் வசூலித்து கட்டிடம் கட்ட இறுதி ஒப்புதல் அளிக்க முன்மொழிவு நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கபடுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. கோத்தகிரி நகராட்சி அலுவலகத்திற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டதால், கட்டிட உரிமத்திற்கான கட்டணம் நகராட்சி அலுவலகத்தில் செலுத்த தகவல் வரும் என இருந்தேன். இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகியும் எனக்கு எந்தவித தகவலும் இல்லாததால், டிசம்பர் இரண்டாம் வாரத்தில் கோத்தகிரி நகராட்சி அலுவலகத்திற்கு சென்று விசாரித்தேன், அப்பொழுது அங்கிருந்த அலுவலர்கள் தற்பொழுது ஆணையாளர் இல்லை, ஆணையாளர் இருக்கும்போது வந்து பாருங்கள் என்று சொன்னார்கள். நானும் சரியென்று வந்துவிட்டேன். அதன்பின் 19.12.2025 அன்று நான் கோத்தகிரி நகராட்சி அலுவலகத்திற்கு சென்று மீண்டும் கட்டிட உரிமம் தொடர்பாக விசாரித்தபோது அங்கிருந்த அலுவலர் ஒருவர் ஏற்கனவே இருந்த கமிஷ்னர் மாறுதலில் சென்றுவிட்டார், தற்போது குன்னூர் கமிஷ்னர் திரு.இளம்பரிதிதான் இன்சார்ஜ், நீங்க அவர போய் பாருங்க என்று சொன்னார். அதன்பின் நான் சொந்த வேலையாக அடிக்கடி பெங்களூரு சென்று வந்ததால் குன்னூர் சென்று ஆணையாளரை சந்திக்க முடியவில்லை. பின்னர் எனக்கு தெரிந்தவர் மூலம் ஆணையாளர் திரு.M.இளம்பரிதி அவர்களின் செல்போன் எண்ணை வாங்கினேன். நான் 09.01.2026-ம் தேதி காலை சுமார் 10.50 மணிக்கு என்னுடைய செல்போன் எண்.9585633888-லிருந்து ஆணையாளர் திரு.இளம்பரிதி செல்போன் எண்.8667841413-க்கு தொடர்புகொண்டு பில்டிங் அப்ரூவல் பற்றி பேசியபோது, கோத்தகிரி நகராட்சி அலுவலகத்திற்குதான் வந்துகொண்டிருக்கிறேன், அலுவலகத்திற்கு வாருங்கள் என்று சொன்னார். நான் சிறிது நேரத்தில் கோத்தகிரி நகராட்சி அலுவலகம் சென்று அங்கிருந்த அலுவலரிடம் ஆணையாளர் வரச்சொன்னார் பார்க்க வேண்டும் என்று சொன்னேன்.அதற்கு அவர் கமிஷ்னர் video conference மீட்டிங்கில் இருக்கிறார், இப்பதான்

மீட்டிங் ஆரம்பிச்சிருக்கு 1 மணிநேரம் கழிச்சுவாங்க என்று சொன்னார். அதன்பின் நான் கடைக்கு வந்துவிட்டேன். பின்னர் சுமார் 12.30 மணிக்கு கோத்தகிரி நகராட்சி அலுவலகம் சென்றேன். அப்போது ஆணையாளர் அறையில் சில நபர்கள் இருந்ததால், நான் அந்த அறை முன்பு காத்திருந்தேன். அவரது அறையில் இருந்தவர்கள் வெளியில் சென்றதும், என்னை உள்ளே வரச்சொல்லி என்ன விஷயம் என்று கேட்டார். அப்போது மணி சுமார் 12.35 மணி இருக்கும். நான் காலையில் போன் செய்த விவரத்தை தெரிவித்து, கையில் எடுத்து சென்ற நீலகிரி மாவட்ட உதவி இயக்குநர் நகர் ஊரமைப்பு துறை அவர்களின் 25.09.2025-ம் தேதியிட்ட செயல்முறை ஆணையை காண்பித்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் பில்டிங் லைசன்ஸ் இன்னும் கிடைக்கவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் அந்த செயல்முறை ஆணையை வாங்கிப்பார்த்து, சிரித்துக்கொண்டே இப்ப கோத்தகிரி நகராட்சிக்கு நான்தான் கமிஷ்னர், நான் சொன்னால்தான் பில்டிங் லைசன்ஸ் கொடுக்க டவுண் பிளானிங் செக்ஷன்ல டிமாண்ட் ரைஸ் பண்ணி எவ்வளவு கட்டணம் செலுத்தவேண்டும் என்று சொல்லுவாங்க, நீங்க பணம் கட்டுண பின்னாடிதான் பில்டிங் லைசன்ஸ் கிடைக்கும் என்று சொன்னார். மேலும் அவர் தனக்கு தனியாக பணம் ரூ.6,00,000/- கொடுத்தால்தான் உங்க Proposal மீது நடவடிக்கை எடுத்து கட்டிட உரிமம் வழங்கமுடியும் என்று சொன்னார். அதற்கு நான் என்னால் அவ்வளவு கொடுக்க இயலாது என்று சொன்னேன். அப்போது அவர் உங்களுக்கு என்ஜினியர் யார் என்று கேட்டார். நான் குன்னூர் என்ஜினியர் திரு.ஸ்ரீதர் என்று சொன்னேன். அதற்கு அவர் குடியிருப்புனா கணக்கு வேற, உங்க கட்டிடம் கமர்ஷியல் லைசென்ஸ், அதனால நீங்க கண்டிப்பா நான் சொல்றத செஞ்சாகனும், இல்லையென்றால் கட்டிடத்திற்கு உரிமம் கொடுக்கமாட்டேன் என்று சொல்லி, நான் உங்க என்ஜினியர் ஸ்ரீதர்கிட்ட பேசிக்கிறேன், நீங்க போய் அவர பார்த்து, அவர் சொல்கிறமாதிரி நடந்துக்கங்க என்று சொன்னார். ஆணையாளர் சொன்ன விவரத்தை தெரிவிக்க மதியம் சுமார் 01.15 மணிக்கு என்ஜினியர் திரு.ஸ்ரீதர் செல்போன் எண்.9486798626-க்கு தொடர்புகொண்டபோது, அவர் செல்போனை எடுக்கவில்லை. மீண்டும் மதியம் சுமார் 01.35 மணிக்கு

அவரை தொடர்புகொண்டு ஆணையாளர் சொன்ன விவரத்தை தெரிவித்தபோது, அவர் தற்போது வேலையாக வெளியில் இருப்பதாகவும், 1 மணி நேரம் கழித்து குன்னூரில் உள்ள தனது அலுவலகத்திற்கு வந்துவிடுவேன் என தெரிவித்தார். அன்று மாலை நான் எனது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் ஹெத்தையம்மன் திருவிழாவிற்கு பேரகணி போகவேண்டியிருந்ததால் மாலை சுமார் 04.30 மணியளவில் திரு.ஸ்ரீதர் எண்ணில் தொடர்புகொண்டு ஹெத்தையம்மன் திருவிழாவிற்கு செல்லும் விவரத்தை தெரிவித்தேன். அதற்கு அவர் திங்கட்கிழமை வாங்க பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார். நான் 12.01.2026-ம் தேதி காலை சுமார் 09.50 மணிக்கு திரு.ஸ்ரீதர் அவர்களை தொடர்பு கொண்டபோது கால் கட்டாகிவிட்டது. திரு.ஸ்ரீதர் உடனடியாக அவரது எண்.9486798626-லிருந்து என்னை தொடர்புகொண்டு மதியம் 12.00 மணிக்குள் வாங்க நான் கமிஷ்னரை பார்க்க போகவேண்டியுள்ளது என்று சொன்னார். நான் அதற்கு சரி என்று சொன்னேன். பின்பு நான் திரு.ஸ்ரீதர் அலுவலகத்திற்கு சென்றபோது அவரது அலுவலகம் பூட்டியிருந்ததால் மதியம் சுமார் 12.30 மணிக்கு திரு.ஸ்ரீதர் அவர்களுக்கு போன் செய்து ஆபிசுக்கு வந்துட்டேன் சார் ஆபிஸ் பூட்டியிருக்கு என்று சொன்னதற்கு, அவர் குன்னூர் முனிசிபல் ஆபீஸில் கமிஷ்னர் கூடதான் இருக்கேன் வெயிட்பண்ணுங்க, வந்துரேனு சொன்னார். பின்னர் மதியம் சுமார் 12.45 மணிக்கு திரு.ஸ்ரீதர் அலுவலகம் வந்தார். திரு.ஸ்ரீதர் என்னிடம் நீங்க என்ன பார்க்க வர்ற விஷயத்த கமிஷ்னர்கிட்ட சொன்னேன், அதற்கு கமிஷ்னர் என்னிடம் உங்க கிளைண்ட்கிட்ட எனக்கு ரூ.6,00,000/- கொடுக்க சொல்லுங்க அப்பதான் பில்டிங் லைசென்சு கொடுப்பேன் என்று சொன்னதாக தெரிவித்தார். அதற்கு நான் என்னால ஒரே நேரத்துல அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு திரு.ஸ்ரீதர்தான் எதுவும் கமிஷ்னர்கிட்ட பேச முடியாது நீங்க வேனா கமிஷ்னர அலுவலகத்துலயோ இல்லைனா சாயங்காலம் அவர் குவாட்டர்ஸ்லயோ இருப்பாரு அங்கபோய் பார்த்து பேசுங்க என்று சொன்னார். நான் சரியென்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பி ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு மதியம் சுமார் 01.40 மணிக்கு குன்னூர் நகராட்சி அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு ஆணையாளர் இல்லாததால்,

திரு.ஸ்ரீதருக்கு போன் செய்து கமிஷ்னர் அலுவலகத்தில் இல்லையென்று சொன்னேன். அதற்கு அவர் ஆபீஸ்ல எதுக்கும் கேட்டுபாருங்க என்று சொன்னார். நான் அலுவலகத்தில் இருந்தவரிடம் ஆணையாளரை பார்க்க வேண்டும் என்று சொன்னேன்.அதற்கு அவர் கமிஷ்னர் இப்பதான் கோத்தகிரி நகராட்சி ஆபீசுக்கு கிளம்பி போறார் என்று சொன்னார். உடனடியாக நானும் அங்கிருந்து கிளம்பி மதியம் சுமார் 02.20 மணிக்கு கோத்தகிரி நகராட்சி அலுவலகத்திற்கு சென்றேன். அப்போது ஆணையாளர் அறையில் ஆணையாளர் திரு.இளம்பரிதி அவர்கள் இரண்டு நபர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். என்னை பார்த்ததும், 2 நிமிடம் காத்திருக்க சொன்னார். பின்னர் அந்த இரண்டு நபர்களை வெளியில் அனுப்பிவிட்டு, என்னை அறையினுள் வரச்சொன்னார். அப்போது நான் என்னுடைய பில்டிங் லைசென்சு சம்மந்தமாக ஆணையாளரிடம் கேட்டதற்கு, அவர் என்னிடம் என்ஜினியர் ஸ்ரீதரை பார்த்தீங்களா, நான் சொன்ன விவரத்தை ஸ்ரீதர் உங்ககிட்ட சொன்னாரா என்று கேட்டார். நான் பில்டிங் லைசென்சுக்கு ரூ.6,00,000/- உங்களுக்கு தரவேண்டும் என்று சொன்னதாக தெரிவித்தேன். அதற்கு அவர் ஓகே, நான் கேட்ட பணத்தை எப்ப கொடுப்பீங்க என்று கேட்டார். சார் என்னால அவ்வளவு பணம் ரெடிபண்ண முடியாது என்று என்னுடைய நிலைமையை சொன்னேன். அதற்கு ஆணையாளர் வீடுன்னா பரவாயில்ல, இது கமர்ஷியல் லைசென்சு, software வேற அப்டேட் ஆகல, அதனால ஆப்லைன்ல manual-ஆதான் ஆர்டர் கொடுக்கனும், ஆடிட்டிங் வேற இருக்கு, இது இல்லாம டவுண் பிளானிங்கிற்கும் கொடுக்கணும், சரி பராவாயில்ல நீங்க ரூ.5,00,000/- கொடுத்துடுங்க, இதே குன்னூரா இருந்தா நிலவரம் வேற என்று சொல்லி நீங்க எனக்கு பணம் கொடுத்தால்தான் பில்டிங் லைசென்சு கிடைக்கும் என்று கண்டிப்புடன் சொன்னார். சார், என்னால உடனடியாக அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு ஆணையாளர் முதல்ல ரூ.2,00,000/- கொடுங்க, நான் ப்ராசஸ் பண்ண ஆரம்பித்துவிடுகிறேன், மீதி பணம் ரூ.3,00,000/- ரெடியானவுடன் பணத்தை செட்டில் பண்ணிட்டு பில்டிங் லைசென்சு வாங்கிக்கங்க என்று சொன்னார். மேலும் பணம் ரெடி பண்ணிட்டு எனக்கு போன் பண்னுங்க நான் என்ன

செய்யனும்னு சொல்றேன் என்று சொல்லி அவருடைய செல்போன் நம்பர் 8667841413-ஐ கொடுத்தார். எனக்கு கோத்தகிரி நகராட்சி பொறுப்பு ஆணையாளர் திரு.M.இளம்பரிதி அவர்கள் கேட்ட பணம் ரூ.5,00,000/-ஐ லஞ்சமாக கொடுத்து கட்டிட உரிமம் பெற விருப்பமில்லை எனவே, அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். உதகமண்டலம், 20.01.2026. ஒப்பம் (XXXX) 20.01.2026 Submitted: Received the above complaint on 20.01.2026 at 08.30 hrs and after conducting a discreet enquiry, registered a case in V & AC, The Nilgiris Cr.No.1/2026 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 20.01.2026 at 09.00 hrs. Sd (XXXX) 20.01.2026 Inspr. of Police, V&AC, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகாரை மாண்புமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

20-01-2026

(G.சண்முக வடிவு)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நீலகிரி.